SRI LANKA

இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

# முன்னோடி வினாத்தாள்

# மட்டம் I

**104 – வியாபாரச் சூழல்**

(BEN)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

**இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்**

# வியாபாரச் சூழல் (BEN)

## முன்னோடி வினாத்தாள்

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்)**

**அனுமதிக்கப்பட்ட காலம்:**

விடையெழுத : 03 மணித்தியாலங்கள்

**வினாத்தாளின் கட்டமைப்பு :**

- இவ்வினாத்தாள் பகுதி A, பகுதி B, பகுதி C என மூன்று பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.
- பகுதி A, பகுதி B, பகுதி C ஆகியவற்றிலுள்ள சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**புள்ளிகள்:**

- ஒவ்வொரு பகுதிக்குமான புள்ளிகளின் ஒதுக்கீடு:

| பகுதி | புள்ளிகள் |
|---|---|
| பகுதி A | 40 |
| பகுதி B | 40 |
| பகுதி C | 20 |
| **மொத்தம்** | **100** |

- ஒவ்வொரு வினாவுக்குமான புள்ளிகள் அவ்வவ் வினாவுடன் காட்டப்பட்டுள்ளன.
- இவ்வினாத்தாளுக்கான சித்திப் புள்ளி 50 % ஆகும்.

**விடைகள்:**

- சகல விடைகளும் தரப்படுகின்ற விடைப் புத்தகத்திலேயே எழுதப்பட வேண்டும். வினாத்தாளில் எழுதப்படுகின்ற விடைகள் புள்ளியிடலுக்காகக் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- ஒவ்வொரு வினாவுக்குமான உங்களது விடைகளை ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கவும்.
- சகல செய்முறைகளும் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.
- பக்க ஓரங்களில் விடப்பட்டுள்ள பகுதியினுள் எழுதக்கூடாது.

**விடைப் புத்தகங்கள்:**

- ஒவ்வொரு விடைப் புத்தகத்தினதும் முகப்பு அட்டையில் அறிவுறுத்தல்கள் தரப்பட்டுள்ளன.

**கணிப்பான்கள்:**

- குறியீட்டு அட்சரகணிதம் மற்றும் வகையீடுகளுக்கான வசதிகளைக் கொண்ட கணிப்பான்கள் தவிர்ந்த ஏனைய கணிப்பான்களைப் பயன்படுத்தலாம். நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான் களின் பாவனை அனுமதிக்கப்படும்.

**இணைப்பு:**

- செயல் வினைச்சொல் நிரல் – ஒவ்வொரு வினாவும் ஒரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கும் (OTQ's தவிர்ந்த). மாணவர்கள் நிரலில் தரப்பட்ட வினைச் சொல்லின் பொருள் வரையறைக்கு ஏற்ப வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**
**இருபது (20) கட்டாய வினாக்கள்**
(மொத்தம் 40 புள்ளிகள்)

**பகுதி A**

## *வினா 01*

**இல. 1.1 தொடக்கம் 1.10 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்தை குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.**

1.1 பின்வருவனவற்றுள் விருப்பத்திற்கான (want) ஓர் உதாரணமாக அமைவது எது?

1) உணவு
2) தொழில் பாதுகாப்பு
3) இல்லம்
4) பாதுகாப்பு

1.2 பின்வருவனவற்றுள் தனியுடமை வியாபாரம் ஒன்றின் பிரதிகூலமாக அமைவது எது?

1) சட்டத் தேவைப்பாடுகள் அதிகம்
2) வரையறையற்ற பொறுப்பு
3) தீர்மானமெடுப்பது தாமதமாதல்
4) தொடக்கக் கிரயத்தின் உயர்ந்த மட்டம்

1.3 பின்வருவனவற்றுள் துணைச் சேவைக்கான ஓர் உதாரணமாக அமையாதது எது?

1) கல்வி
2) தொடர்பாடல்
3) காப்புறுதி
4) களஞ்சிய முகாமை

1.4 பின்வருவனவற்றுள் தொடர்பாடல் செயன்முறையின் ஒரு கூறாக அமையாதது எது?

1) செய்தி
2) அனுப்புநர்
3) ஒலி
4) நோக்கம்

1.5 வர்த்தக வங்கிகளிடையே குறுகிய கால கடன் கேள்விகள் மற்றும் குறுகிய கால வழங்கல்கள் நடைபெறுகின்ற சந்தை :

1) திறைசேரி முறிச் சந்தை
2) வங்கிகளுக்கிடையேயான அழைப்பு பணச் சந்தை
3) பங்குச் சந்தை
4) கூட்டு நிறுவன முறிச் சந்தை

1.6 பின்வருவனவற்றுள் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றின் ஓர் அம்சமாக அமையாதது எது?

1) அதியுயர் நம்பிக்கை
2) ஒரு செல்லுபடியான ஒப்பந்தம்
3) நட்ட உத்தரவாதம்
4) காப்புறுத்தத்தக்க நாட்டம்

1.7 காசோலை ஒன்றின் குறுக்குக் கோடிடலை இரத்துச் செய்யும் ஒரு நபர் :

1) காசோலையை மாற்றுபவர் (Transferee)
2) வர்த்தக வங்கி
3) பணத்தைப் பெறுபவர் (Payee)
4) காசோலை எழுதுபவர்

1.8 பின்வருவனவற்றுள் உரிமையியல் ஒழுங்கமைப்பு ஒன்றின் பண்பியல்பாக அமையாதது எது?

1) உரிமை வழங்குபவர் தனது வர்த்தக நாமத்தை உரிமை பெறுபவர் பயன்படுத்து வதற்குப் வழமையாக அனுமதிப்பார்.
2) இலாபத்தை வழமையாக உரிமை பெறுபவரும் உரிமை வழங்குபவரும் பகிர்ந்துகொள்ள வேண்டியிருக்கும்.
3) உரிமை வழங்குபவர் வழமையாக பயிற்சிச் சேவையை உரிமை பெறுபவருக்கு வழங்குவார்.
4) உரிமை வழங்குபவர் வழமையாக உரிமை பெறுபவருக்கு தொழில்நுட்ப உதவியை வழங்குவார்.

1.9 பின்வருவனவற்றுள் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்று தொடர்பில் சரியான கூற்று எது?

1) உயர்ந்தபட்ச பங்குதாரர்களின் எண்ணிக்கை 20 ஆகும்.
2) பங்குகளை பொதுமக்களுக்கு விநியோகிக்க முடியும்.
3) குறைந்தபட்ச பணிப்பாளர்களின் எண்ணிக்கை 1 ஆகும்.
4) வருடாந்த அறிக்கையைப் பிரசுரிப்பது கட்டாயமானதாகும்.

1.10 பின்வருவனவற்றுள் தனியுடமை வியாபாரம் ஒன்றுடன் ஒப்பிடுகையில் பங்குடமை ஒன்றின் அனுகூலமாக அமைவது எது?

1) பொறுப்பு வரையறுக்கப்பட்டிருத்தல்
2) அதிக மூலதனத்தைக் கொண்டிருப்பதற்கான சாத்தியம் காணப்படுகிறது.
3) தீர்மானங்கள் ஒரு நபரினால் எடுக்கப்படுகின்றன.
4) சட்ட ஆளுமை (personality) இல்லை.

**பின்வரும் ஒவ்வொரு கூற்றும் சரியானதா அல்லது தவறானதா எனக் குறிப்பிடுக. உங்களது விடையினை (சரியானது / தவறானது) விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தை எழுதி அதன் எதிரே எழுதுக.**

1.11 திறைசேரி உண்டியல் சந்தை பணச் சந்தையின் ஒரு பகுதியாகும்.

1.12 ஊழியர்களின் பேரம்பேசும் சக்தியானது போட்டரின் ஐந்து படைகள் மாதிரியின் ஒரு உறுப்பாகும்.

1.13 சேவை வாடிக்கையாளர்களின் நேரம் மற்றும் சக்தியானது இலத்திரனியல் வர்த்தகத்தின் பிரபல்யத்திற்கான ஒரு காரணமாகும்.

1.14 சிறந்ததற்காக வழங்கப்படும் விருதுகள் என்பது அரசாங்கத்தால் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்காக வழங்கப்படுகின்ற நிதி சாரா வெகுமதி ஒன்றாகும்.

1.15 மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ஆனது சமூக மற்றும் கலாசாரத்தின் நிலைபேறான தன்மைக்கு வியாபாரத்தின் பங்களிப்புக்கான ஒரு காரணியாகும்.

**இல. 1.16 தொடக்கம் 1.20 வரையான வினாக்களுக்கான விடையினை உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தை எழுதி அதன் எதிரே எழுதுக.**

1.16 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் (SMES) பண்பியல்புகள் நான்கினை (04) எழுதுக.

1.17 தொழில் முயற்சியாளருக்கும் வியாபாரிக்குமிடையிலான (வணிகர்) வேறுபாடுகள் இரண்டினை (02) குறிப்பிடுக.

1.18 நான்கு (04) பணிச் சூழல் படைகளைப் பட்டியலிடுக.

1.19 காசோலையொன்று மறுக்கப்படக்கூடிய நான்கு (04) சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

1.20 பங்காளர் ஒருவரின் கடமைகள் நான்கினைக் (04) குறிப்பிடுக.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம் 40 புள்ளிகள்)

***பகுதி A நிறைவு***

**நான்கு (04) கட்டாய வினாக்கள்**
(மொத்தம் 40 புள்ளிகள்)

**பகுதி B**

## *வினா 02*

வணிகமும் துணைச் சேவைகளும் வர்த்தகத்தின் இரண்டு கூறுகளாகும். எளிமையாகக் கூறின், வணிகம் என்பது விலை ஒன்றிற்கான பரிமாற்றத்தின் ஊடாக நபர் ஒருவரிடமிருந்து இன்னுமொரு நபருக்கு மாற்றப்படும் பொருள் அல்லது சேவை ஒன்றின் உரிமையை வாங்குதலும் விற்றலும் ஆகும். வணிகம் என்பது நவீன மனிதத் தேவைகள் மற்றும் விருப்பங்களை நிறைவேற்றுவதில் தவிர்க்கமுடியாத ஒரு பகுதியாகும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) விநியோகத்தின் நான்கு (04) வழிமுறைகளை **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(b) வெளிநாட்டு வணிகம் ஒரு நாட்டிற்கு ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) மொத்த வணிகத்தின் நான்கு (04) பண்பியல்புகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## *வினா 03*

வரையறுக்கப்பட்ட நிலைபேறான சக்தி தனியார் கம்பனியானது சூரியப் பலகங்களைத் தயாரிக்கின்ற ஒரு கம்பனியாகும். அது மிகச் சிறந்த தெரிவினைத் தேர்வு செய்வதற்காக பதிலீட்டுத் தெரிவுகளை மதிப்பீடு செய்யும்போது பூமி மற்றும் மக்கள் பற்றிய அதன் தீர்மானங்கள், அதனோடிணைந்த நன்மைகள் போன்றவற்றின் தாக்கங்கள் பற்றிக் கருத்திலெடுக்கிறது. கம்பனியின் முகாமையானது சமூகப் பொறுப்புடைமை பற்றிய அதன் விழிப்புணர்வு மற்றும் இயற்கை வளங்களையும் சமூக நீதியையும் பாதுகாப்பதற்கான அதன் பங்களிப்பையும் குறித்து மிகவும் பெருமிதம் கொள்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) வரையறுக்கப்பட்ட நிலைபேறான சக்தி தனியார் கம்பனியைப் போன்ற வியாபாரம் ஒன்றின் மூன்று (03) பிரதான இலக்குகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) வரையறுக்கப்பட்ட நிலைபேறான சக்தி தனியார் கம்பனிக்கான நிறுவன சமூகப் பொறுப்புடமையின் மூன்று (03) அனுகூலங்களைப் **பட்டியலிடுக.** (03 புள்ளிகள்)

(c) வரையறுக்கப்பட்ட நிலைபேறான சக்தி தனியார் கம்பனிக்கான வியாபார ஒழுக்கநெறியின் முக்கியத்துவத்தை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## *வினா 04*

வர்த்தக வங்கிகள் தமது வியாபார நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் மாத்திரமன்றி சாதாரண மக்களது வாழ்க்கையின் சௌகரியமான தொழிற்பாட்டிற்கும் பிரதான வகிபாகமொன்றை ஆற்றுகின்றன. நாட்டினுள் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள் அல்லது நாடுகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களின்போது, வினைத்திறனான கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதில் வர்த்தக வங்கிகளின் பங்களிப்பு மகத்தானதாகும். எவ்வாறாயினும், வர்த்தக வங்கிகளின் தொழிற்பாடுகள் மத்திய வங்கியினால் போதுமான அளவிற்கு கண்காணிக்கப்பட வேண்டும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) வியாபாரம் ஒன்றிற்கு வர்த்தக வங்கியொன்றின் நான்கு (04) சேவைகளைக் **குறிப்பிடுக.**

(02 புள்ளிகள்)

(b) இலங்கை மத்திய வங்கியின் மூன்று (03) தொழிற்பாடுகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) தற்காலச் சூழமைவில் பயன்படுத்தப்படும் இலத்திரனியல் பணத்தின் மூன்று (03) வகைகளை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## *வினா 05*

காப்புறுதியானது வியாபாரத்திற்கான மிக முக்கியமான துணைச் சேவை ஒன்றாகும். காப்புறுதி இடர் முகாமைத்துவத்தின் ஒரு வடிவமாகும். இது பிரதானமாக எதிர்கால நிதிசார் நட்ட இடருக்கு எதிரான வேலியாகப் பயன்படுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) வியாபார நிறுவனமொன்றிற்கு காப்புறுதி ஏன் முக்கியமானது என்பதற்கான நான்கு (04) காரணங்களை **விபரிக்க.** (06 புள்ளிகள்)

(b) இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற காப்புறுதிக் கொள்கைகளின் நான்கு (04) வகைகளை **பட்டியலிடுக.** (02 புள்ளிகள்)

(c) காப்புறுதியின் நான்கு (04) கோட்பாடுகளைப் **பட்டியலிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**பகுதி B நிறைவு**

**ஒரு கட்டாய வினா**
(மொத்தம் 20 புள்ளிகள்)

**பகுதி C**

AAT தகைமையையும் பல்கலைக்கழகப் பட்டத்தையும் நிறைவு செய்ததன் பின்னர், சாரங்கன் ஐந்து (05) மாணவர்களுடன் ஐந்து ஆண்டுகளுக்கு (05) முன்னர் திருகோணமலையில் தனது சொந்த தொழில்சார் கல்வி கற்பித்தல் நிலையத்தை ஆரம்பித்தார். AAT இன் இரண்டு அகில இலங்கைப் பரிசு வெற்றியாளராக, AAT மற்றும் கற்பித்தலில் அவரது நிபுணத்துவமானது தற்போது ஐநூறு (500) மாணவர்கள் என்ற நிலையில் தனது வியாபாரத்தை விருத்தி செய்வதற்கு அவருக்கு உதவியிருந்ததுடன் இந்நிலை பற்றி எப்போதும் அவர் பெருமிதம் கொள்கிறார். சமூக மற்றும் பொருளாதாரத்திற்கான சாரங்கனின் பங்களிப்புக்காக கடந்த வாரம் சிறந்த SME விருதினை அவர் பெற்றுக்கொண்டார்.

எவ்வாறாயினும், தனியுடமை வியாபாரி ஒருவராக, அவர் தனது வியாபாரத்தை விரிவாக்கம் செய்வதில் சில வரையறைகளைக் கொண்டிருக்கிறார். பெற்றோர் மற்றும் மாணவர்கள் மத்தியில் தொழில்சார் தகைமைகளின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு மட்டம் அதிகரித்திருந்த போதிலும், மூலதனப் பற்றாக்குறை மற்றும் அதிகரிக்கின்ற போட்டி காரணமாக வியாபாரத்தை மேலும் விரிவாக்கம் செய்வதற்கு அவரால் இயலாமலிருக்கிறது.

சாரங்கன் இலங்கையில் வழக்கமாக SMEs முகங்கொடுக்கின்ற பல சவால்களை தற்போது எதிர்கொள்கிறார். எவ்வாறாயினும், ஒரு தொழில் முயற்சியாளர் என்ற வகையில் முகங்கொடுக்கின்ற சவால்கள் சாரங்கனுக்குப் புதியதல்ல. அவர் கடந்த ஐந்து ஆண்டு காலப்பகுதியில் அச்சுறுத்தல்களை வாய்ப்புகளாக மாற்றுவதில் வெற்றி கண்டிருக்கிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) தனியுடமை வியாபாரமொன்றின் இரண்டு (02) அனுகூலங்களையும் இரண்டு (02) பிரதிகூலங்களையும் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) SWOT பகுப்பாய்வைப் பயன்படுத்தி சாரங்கனின் வியாபாரச் சூழலை **மதிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(c) இலங்கையில் SMEs இனால் எதிர்நோக்கப்படுகின்ற நான்கு (04) சவால்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(d) தொழில் முயற்சியாளர்களின் நான்கு (04) பண்பியல்புகளைப் **பட்டியலிடுக.** (02 புள்ளிகள்)

(e) ஒரு நாட்டிற்கான தொழில் முயற்சியாளரின் நான்கு (04) பங்களிப்புகளை **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 02 புள்ளிகள்)

**பகுதி C நிறைவு**

# செயல் வினைச் சொல் பட்டியல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | பகுப்பாய்வு செய்தல் (Analyze) | தீர்வினை அல்லது பேறினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங் களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | முடிவொன்றை அடையும் நோக்கில் விவாதம் மூலம் விபரமாகப் பரீட்சித்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காகப் ஆய்வு செய்தல் |
| | | சுருக்கமாகக் குறிப்பிடுக (Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | தொடர்பாடுக (Communicate) | தகவல்களைப் பங்கிடுதல் அல்லது பகிர்தல் |
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றுதலும் | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | | எடுத்துக்காட்டுடன் விபரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | தயாரிக்குக (Prepare) | கேட்கப்பட்ட விடயத்தை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடு அல்லது விளக்கங்கள் மூலம் தீர்வு காணல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | வரைபுத்தாளில் வரைக (Graph) | வரைபடங்கள் மூலம் காட்டுதல் |
| | | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile) | வேறொன்றுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தல் | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக (Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடு தலும் |
| | | பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret) | விளங்கக்கூடிய வகையில் தெளிவுபடுத்துதல் |
| | | ஏற்பிசைவு செய்தல் (Recognize) | அறிவை அல்லது அது சார்ந்த அனுபவத்தைக் கொண்டு செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| அறிவு (1) | விடயங்களை ஞாபகப்படுத்தலும் அடிப்படை எண்ணக்கருக்களும் | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |
| | | அடையாளங் காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | | கூறுக / குறிப்பிடுக (State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாகத் தெரிவித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | | வரைக (Draw) | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

104 – வியாபாரச் சூழல்

(BEN)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

**பகுதி A**

இருபது (20) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 25 புள்ளிகள்)

**1.1)** 2
**1.2)** 2
**1.3)** 1
**1.4)** 3
**1.5)** 2
**1.6)** 3
**1.7)** 4
**1.8)** 2
**1.9)** 3
**1.10)** 2
**1.11)** சரியானது
**1.12)** தவறானது
**1.13)** சரியானது
**1.14)** சரியானது
**1.15)** சரியானது

**1.16)** – முதலீடு குறைவாக உள்ளது.

- குடும்ப அங்கத்தவர்கள் பணியாற்றுகின்றனர்.
- சந்தையொன்று உள்ளது.
- வியாபாரம் உள்நாட்டுச் சந்தைகளை இலக்கு வைத்திருக்கிறது.
- குறைந்தளவான பணித்தொகுதியினர்.

**(ஒவ்வொன்றுக்கும் 1/2 புள்ளி வீதம் - 2 புள்ளிகள்)**

**1.17)**

| தொழில்முயற்சியாளர் | வியாபாரி |
|---|---|
| - தனது சொந்த யோசனை அல்லது புதிய எண்ணக்கருவுடன் வியாபாரமொன்றை ஆரம்பிப்பார். | - இருக்கின்ற யோசனை அல்லது எண்ணக்கருவுடன் வியாபாரமொன்றை ஆரம்பிப்பார். |
| - இவர் ஒரு புத்தாக்குநராக இருப்பார். | - இவர் ஒரு பாரம்பரியமானவராக இருப்பார். |
| - இவர் இடர்களுக்கு முகங்கொடுப்பார். | - இவர் இடர்களுக்கு முகங்கொடுக்க விரும்புவதில்லை. |

**(ஒவ்வொன்றுக்கும் 1 புள்ளி வீதம் - 2 புள்ளிகள்)**

**1.18)** – நுகர்வோர்

- வழங்குநர்கள்
- போட்டியாளர்கள்
- அழுத்தக் குழுக்கள்

**(ஒவ்வொன்றுக்கும் 1/2 புள்ளி வீதம் - 2 புள்ளிகள்)**

**1.19)** - கணக்கில் போதியளவு பணமின்மை

- காசோலை வரையுநர் வக்கற்றவராக மாறுதல்
- காசோலை வரையுநர் கொடுப்பனவை நிறுத்துதல்
- கணக்கு மூடப்பட்டிருத்தல்
- காசோலையொன்று எழுதப்படுவதில் வழுக்கள் விடப்பட்டிருப்பதன் காரணமாக

**(ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதம் - 2 புள்ளிகள்)**

**1.20)** – நன்னம்பிக்கையைக் கவனித்தல்

- எந்தவொரு மோசடிச் செயலுக்கும் இழப்புச் சரிவுக்கும் பொறுப்பாக இருத்தல்
- தளரா ஊக்கத்துடன் வியாபாரச் செயற்பாடுகளில் ஈடுபடல்
- தனிப்பட்ட இலாபங்களை கணக்கிற் கொள்ளக்கூடாது
- போட்டி வியாபாரங்களிலிருந்து இலாபத்தைச் சம்பாதிக்கக் கூடாது

**(ஒவ்வொன்றுக்கும் 1/2 புள்ளிகள் வீதம் - 2 புள்ளிகள்)**

**(ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)**

**வினா 02**

| | |
|---|---|
| **அலகு 4 – வியாபார நிறுவனங்களில் வணிகம்** | |
| கற்றற் பேறுகள் | – வணிகம் என்பதன் கருத்தையும் விநியோக வழிமுறைகளையும் இனங்காணல் |
| | – சில்லறை விற்பனை, மொத்த விற்பனை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வணிகம் ஆகியவற்றிலுள்ள புதிய போக்குகளை ஏற்பிசைவு செய்தல் |

**(a)**

**பூச்சிய (0) மட்டம்**

உற்பத்தியாளர் → வாடிக்கையாளர்

**மட்டம் 1**

உற்பத்தியாளர் → சில்லறை விற்பனையாளர் → வாடிக்கையாளர்

**மட்டம் 2**

உற்பத்தியாளர் → மொத்த விற்பனையாளர் → சில்லறை விற்பனையாளர் → வாடிக்கையாளர்

**மட்டம் 3**

உற்பத்தியாளர் → மொத்த விற்பனையாளர் → முகவர்/ தரகர் → சில்லறை விற்பனையாளர் → வாடிக்கையாளர்

**( 02 புள்ளிகள்)**

**(b)**

1. **தொழிற் பிரிப்பும் சிறப்புத்தேர்ச்சியும்** – வெளிநாட்டு வணிகமானது உலக மட்டத்தில் தொழிற் பிரிப்புக்கும் சிறப்புத்தேர்ச்சிக்கும் வழிவகுக்கிறது. சில நாடுகள் மிகுதியான இயற்கை வளங்களைக் கொண்டிருப்பதால் மனித வலுத் திறனில் மேம்பட்ட நாடுகளுக்கு மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்து முடிவுப் பொருட்களை இறக்குமதி செய்தல் வேண்டும். எனவே வெளிநாட்டு வணிகமானது சகல நாடுகளுக்கும் நன்மையை வழங்குவதுடன் தொழிற் பிரிப்புக்கும் சிறப்புத் தேர்ச்சிக்கும் வழிவகுக்கிறது.

2. **உத்தமமான ஒதுக்கீடும் வளங்களின் பயன்பாடும்** – சிறப்புத்தேர்ச்சி காரணமாக, ஆக்கவளமற்ற / உற்பத்தியில்லா வரிசைகளை நீக்க முடியுமாக இருப்பதுடன் வளங்களின் விரயத்தையும் குறைக்க அல்லது தவிர்க்க முடியும். வேறு வகையில் கூறுவதாயின், உயர்ந்தளவு வருவாயைத் தரக்கூடிய பொருட்களின் உற்பத்திக்காக மாத்திரம் வளங்கள் வழிப்படுத்தப்படுகிறது. எனவே வெளிநாட்டு வணிகம் காரணமாக சர்வதேச மட்டத்தில் வளங்களின் பகுத்தறிவுமிக்க ஒதுக்கீடும் பயன்பாடும் காணப்படுகிறது.

3. **விலைகளின் சமநிலை** – வெளிநாட்டு வணிகத்தின் மூலம் விலைகளை நிலையானதாகப் பேண முடியும். இது விலைகளின் சமநிலையை மாற்றுகின்ற கேள்வி மற்றும் நிரம்பல் நிலைமைகளை நிலையாகப் பேணுவதற்கு உதவுகிறது.

4. **பல்தேர்வுகளின் கிடைப்பனவு** – வெளிநாட்டு வணிகமானது நுகர்வோருக்கு சிறந்த தெரிவொன்றினை வழங்குவதற்கு உதவுகிறது. இது உலகம் பூராகவும் உள்ள நுகர்வோருக்கு புதிய வகைகளை சந்தைப்படுத்துவதற்கு உதவுவதுடன், பரந்துபட்ட பல தேர்வுகளிலிருந்து தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பத்தையும் நுகர்வோருக்கு வழங்குகிறது.

5. **தரம் மற்றும் நியமமான பொருட்களை நிச்சயப்படுத்தல்** – வெளிநாட்டு வணிகம் ஆனது பொருட்களுக்கான கேள்வியைப் பேணுவதற்கும் அதனை உயர்த்துவதற்கும் அதிகளவான போட்டித்தன்மையைக் கொண்டிருப்பதால் ஏற்றுமதி செய்யும் நாடுகள் பொருளின் தரத்தைப் பேண வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகிறது. இதனால் வெளிநாட்டு வணிகமானது தரமான மற்றும் நியமப்படுத்தப்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதை நிச்சயப்படுத்துகிறது.

6. **மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைதல்** – இறக்குமதிகள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும். இது ஏனெனில், மக்கள் புதிய மற்றும் சிறந்த வகை பொருட்கள் மற்றும் சேவைகளின் தெரிவினைக் கொண்டிருக்கின்றனர். புதிய மற்றும் சிறந்த வகைப் பொருட்களை நுகர்வதன் மூலம், மக்கள் தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக்கொள்ள முடியும்.

7. **தொழில் வாய்ப்புகள் உருவாதல்** – வெளிநாட்டு வணிகமானது தொழிலாளர் மற்றும் வளங்களின் அசைவினை அதிகரிப்பதன் காரணமாக தொழில் வாய்ப்புகள் உருவாவதற்கு உதவி புரிகின்றது. இது பொருளாதாரத்தின் இறக்குமதித் துறையில் நேரடித் தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதுடன் கைத்தொழில், சேவைத் துறை (காப்புறுதி, வங்கியியல், தொடர்பாடல்) போன்ற ஏனைய துறைகளில் மறைமுக தொழில் வாய்ப்புகளையும் உருவாக்குகிறது.

8. **பொருளாதார அபிவிருத்திக்கு வசதியளித்தல்** – இறக்குமதிகள் தேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு வசதியளிக்கின்றன. இது எவ்வாறெனின், மூலதனப் பொருட்கள் மற்றும் தொழில்நுட்பவியலின் இறக்குமதியுடன், ஒரு நாடு பொருளாதாரத்தின் சகல துறைகளிலும் வளர்ச்சியை உருவாக்க முடியும், அதாவது விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகளில்.

9. **இயற்கைச் சீற்றங்களின்போதான உதவி** – பூமியதிர்வு, வெள்ளம், பஞ்ச நிலை போன்ற இயற்கைச் சீற்றங்களின்போது, பாதிப்புக்குள்ளான நாடு அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறைப் பிரச்சினையை எதிர்நோக்குகிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக வேறு நாடுகளிலிருந்து உணவுத் தானியங்கள் மற்றும் மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு வெளிநாட்டு வணிகம் வழிவகை செய்கிறது.

10. **சென்மதி நிலுவை நிலையினைப் பேணுதல்** – ஒவ்வொரு நாடும் அதன் சென்மதி நிலுவையைப் பேண வேண்டியிருக்கிறது. இதனால் ஒவ்வொரு நாடும் அன்னியச் செலாவணியின் வெளிப்பாய்வுக்காக இறக்குமதியை மேற்கொள்ள வேண்டியிருப் பதுடன் அன்னியச் செலாவணியின் உட்பாய்வுக்காக ஏற்றுமதியையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

11. **நற்பெயரைக் கொண்டுவருதலும் நன்மதிப்பைச் சம்பாதிக்க உதவுதலும்** – ஏற்றுமதியில் ஈடுபடுகின்ற ஒரு நாடு சர்வதேச சந்தையில் நன்மதிப்பினைச் சம்பாதிக்கிறது. உதாரணமாக, தனது தரமான இலத்திரனியல் பொருட்களின் ஏற்றுமதி காரணமாக வெளிநாட்டுச் சந்தைகளில் யப்பான் நாடு மிகப் பெரிய நன்மதிப்பினைச் சம்பாதித்திருக்கிறது.

12. **உலக சமாதானம் மேம்பாடடைகிறது** – வெளிநாட்டு வணிகம் நாடுகளை நெருக்கமாக்குகிறது. இது அபிவிருத்தி அடைந்த நாடுகளிலிருந்து அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு தொழில்நுட்பவியல் மற்றும் ஏனைய உதவிகளை பரிமாற்றம் செய்வதற்கு வசதியளிக்கிறது. இது வணிக உடன்படிக்கைகளால் எழுகின்ற பொருளாதார உறவுகள் காரணமாக வெவ்வேறுபட்ட நாடுகளை நெருக்கமாகக் கொண்டு வருகிறது. இதனால், வெளிநாட்டு வணிகமானது போர்கள் மற்றும் முரண்பாடுகளை தவிர்க்கின்ற சிநேகபூர்வமான ஒரு சூழ்நிலையை உருவாக்குகிறது. தமக்கிடையே சிநேகபூர்வ உறவினைப் பேணுவதற்கு முயற்சிக்கின்ற நாடுகளால் உலக சமாதானம் மேம்பாடடைகிறது.

**(ஏறுமதியின் ஏதாவது மூன்று நன்மைகளுக்கு 06 புள்ளிகள்)**

**(c)**

1. மீள்விற்பனை நோக்கத்துடனான பொருட்களின் கொள்வனவு
2. துண்டங்களாக / தொகுதிகளாக பொருட்களின் விற்பனை
3. வணிகக் கழிவுகள் வழங்குதல்
4. அதிக அளவுகளில் பொருட்களின் சேமிப்பு
5. விற்பனை மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடல்
6. சந்தை ஆய்வுகளை முன்னெடுத்தல்
7. தொகையளவான பொருள் விநியோகத்தின்போது போக்குவரத்து சேவையினை வழங்குதல்

**(ஏதாவது மூன்று விடைகளுக்கு 03 புள்ளிகள்)**

**வினா 03**

**அலகு 1 – வியாபார எண்ணக்கருவும் பல்வேறு வகையான நிறுவனங்களும்**

**அலகு 5 – வியாபாரத்தில் அரசாங்கத்தின் செல்வாக்கு, வியாபார ஒழுக்கநெறிகளின் முக்கியத்துவம் மற்றும் வியாபாரமொன்றின் CSR.**

கற்றற் பேறுகள் – வியாபாரத்தின் எண்ணக்கருக்களை விபரித்தல்

– வியாபார ஒழுக்கநெறிகளின் முக்கியத்துவத்தை இனங்காணலும் விபரித்தலும்

– வியாபார நோக்கங்களை அடைவதற்கு CSR இன் தேவையை ஏற்பிசைவு செய்தல்

**(a)**

1. உரிமையாளரின் செல்வ வளத்தை உச்சப்படுத்தல்
2. நீண்ட கால வளர்ச்சி
3. ஊழியர்களின் சேமநலனில் மேம்பாடு
4. இயற்கைச் சூழலைப் பாதுகாத்தல் அல்லது சூழல் மீதான எதிர்மறைத் தாக்கங்களைக் குறைத்தல்
5. உள்நாட்டுச் சமுதாயத்தின் வாழ்க்கைப் பாணியை மேம்படுத்தல்
6. வாடிக்கையாளர் திருப்தியை உச்சப்படுத்தல்

**(ஏதாவது மூன்று விடைகளுக்கு 03 புள்ளிகள்)**

**(b)**

1. வியாபாரத்தின் நற்பெயரை உயர்த்துதல்
2. ஊழியர்களின் நன்னடத்தையை மேம்படுத்தல்
3. பசுமை நுகர்வோரை கவர்ந்திழுப்பதற்கான சாத்தியத்தன்மை
4. வரி நன்மைகள்
5. உள்நாட்டுச் சமுதாயத்திடமிருந்து அதிகளவான ஆதரவு

**(ஏதாவது மூன்று விடைகளுக்கு 03 புள்ளிகள்)**

**(c)**

1. **அடிப்படை மனிதத் தேவைகளுடன் பொருந்தியிருத்தல் :**

   ஒவ்வொரு மனிதனினதும் அடிப்படைத் தேவை என்னவெனின், தங்களை மதிக்கக்கூடிய மற்றும் பெருமிதம் கொள்ளக்கூடிய அமைப்பொன்றின் ஒரு பகுதியாக இருக்க விரும்புகிறார்கள் ஏனெனில் அது ஒரு ஒழுக்க நெறிமுறை என அவர்கள் உணர்கிறார்கள். ஒவ்வொருவரும் விரும்புவது ஒரு நேர்மையான மற்றும் சமூகப் பொறுப்புமிக்க அமைப்பாக சமூகம் மதிக்கின்ற ஒரு நிறுவனத்துடன் இணைந்திருப்பதை ஆகும். மனித வள முகாமையாளர்கள் ஊழியர்களின் இந்த அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டியிருப்பதுடன் ஒரு ஒழுக்கநெறி மிக்க நிறுவனத்தை வழிப்படுத்த விரும்பும் அவர்களின் சொந்த அடிப்படைத் தேவையையும் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது. ஊழியர்களின் அதேபோன்று முகாமையாளர்களின் அடிப்படைத் தேவைகள் ஒழுக்கநெறி சார்ந்ததாக இருக்க வேண்டுமென நிறுவனத்தை நிர்ப்பந்திக்கின்றனர்.

2. **பொதுமக்களின் நம்பகத்தன்மை :**

   நிறுவனமொன்றின் ஒழுக்கநெறி விழுமியங்கள் பொதுமக்களின் பார்வையில் நம்பகத்தன்மையை உருவாக்குகின்றன. கம்பனி நேர்மையானதாகவும் அது பணத்திற்கான பெறுமதியை வழங்குகிறது என்பதையும் பொதுமக்கள் நம்புவார்களாயின் கம்பனிப் பொருட்களை வாங்குவதற்கு அவர்கள் விரும்புவார்கள். அத்தகைய கம்பனிகளின் பொதுமக்கள் பிரச்சினைகள் வெற்றிகரமானதொன்றாக இருக்க வேண்டுமென வரையறுக்கப்படுகிறது. இந்தக் காரணத்தினால் தங்களது உற்பத்திப் பொருட்கள் பாதுகாப்பானதும் எந்த வகையான பூச்சிகொல்லிகளும் அற்றவை என மக்களை நம்பவைப்பதற்காக தற்காலத்தில் கோலா கம்பனிகள் மாத்திரமே விளம்பரங்களுக்காகப் பெருந் தொகைப் பணத்தைச் செலவிடுகின்றன.

3. **ஊழியர்களுடனான நம்பகத்தன்மை :**

   ஊழியர்கள் நிறுவனத்தின் ஒழுக்கநெறி விழுமியங்களில் நம்பிக்கை கொள்ளும்போது அவர்கள் பணிகளைச் செய்வதுடன் நிறுவனத்தை மிகுந்த மரியாதையுடன் வைத்திருக்கிறார்கள். இது பொதுவான இலக்குகள், நியமங்கள் மற்றும் மொழியினை உருவாக்குகிறது. பொதுமக்களின் பார்வையில் நிறுவனத்திற்கு நம்பகத்தன்மை காணப்படுவதால் மனித வள முகாமையாளர் ஊழியர்களுடன் நம்பகத்தன்மையைக் கொண்டிருப்பார். உணரப்பட்ட சமூக நேர்மையும் தார்மீக விழுமியங்களும் ஊழியர்களை வேறு எந்த ஊக்கத் திட்டங்களையும்விட அதிகமாக வெற்றிகொள்ள முடியும்.

4. **சிறந்த தீர்மானமெடுத்தல் :**

   ஒழுக்கநெறிக்கான மரியாதைகள், நிறுவனமொன்று தீர்மானங்களை எடுக்கும்போது பல்வேறு பொருளாதார, சமூக மற்றும் ஒழுக்கநெறி அம்சங்களை கவனத்திற் கொள்ளும்படி அதன் முகாமையைக் கட்டாயப்படுத்தும். தீர்மானங்கள் பொதுமக்கள், ஊழியர்கள் மற்றும் கம்பனியின் சொந்த நீண்ட கால நலனில் நாட்டம் கொண்டிருப்பதாக இருப்பின் தீர்மானமெடுத்தல் சிறந்ததாக இருக்கும்.

5. **இலாபத்தன்மை:**

ஒழுக்கநெறியுடன் இருப்பது எவ்வித இலாபத்தையும் உழைக்காது என அர்த்தப்படாது. ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தன்னைப் பற்றிய பொறுப்பு இருக்கிறது. அதாவது இலாபத்தைச் சம்பாதிப்பது. ஒழுக்கநெறியான கம்பனிகள் குறுகிய கால ஓட்டத்தில் பணத்தை இழக்கக்கூடும் என்ற போதிலும் நீண்ட கால ஓட்டத்தில் வெற்றிகரமானவையாகவும் அதிக இலாபம் ஈட்டக்கூடியவையாகவும் இருக்கின்றன.

6. **சமூகப் பாதுகாப்பு:**

நாட்டின் சட்ட முறைமையைக் காட்டிலும் சிறந்த முறையில் ஒழுக்கநெறிகளால் ஒரு சமூகத்தைப் பாதுகாக்க முடியும். சட்டம் தோல்வியடையுமிடத்தும் ஒழுக்கநெறிகள் எப்பொழுதும் வெற்றியடைகின்றன. சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கின்ற சகல நடவடிக்கைகளையும் அரசாங்கத்தால் ஒழுங்குபடுத்த முடியாது. ஒழுக்கநெறியில் சிறந்த ஒரு மனித வள முகாமையாளரால், காவல் துறையினரைவிட மிகவும் வினைத்திறனான முறையில் கிளர்ச்சியடைந்த ஊழியர்களை அணுக முடியும்.

**(ஏதாவது நான்கு விடைகளுக்கு 04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**வினா 04**

**அலகு 3 – வியாபாரத்திற்கான துணைச் சேவைகள்**

கற்றற் பேறுகள் – துணைச் சேவைகளின் வகிபாகத்தை இனங்காணல்

- ஒரு வியாபாரத்தின் வெற்றிக்கு துணைச் சேவைகளை முகாமிப்பதன் முக்கியத்துவத்தை விவரித்தல்

**(a)**

1. மிகைப் பணத்தினை வைப்புகளாக ஏற்றுக்கொள்ளல்
2. வியாபாரங்களுக்குக் கடன் வழங்குதல்
3. காசோலைக் கொடுக்கல் வாங்கல்களை அனுமதித்தல்
4. தேவைக்கேற்ப மேலதிகப் பற்று வசதிகளை வழங்குதல்
5. வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம்
6. நாணய அனுப்பலை எளிதாக்குதல்
7. ஆலோசனை
8. மத்தியஸ்தம் ஊடாக சர்வதேச வியாபாரத்திற்கு வசதியளித்தல்

**(ஏதாவது நான்கு விடைகளுக்கு 04 புள்ளிகள்)**

**(b)**

1. நாணயக் குற்றிகளையும் நாணயத் தாள்களையும் விநியோகித்தல்
2. சகல வங்கிகளினதும் வங்கியாளராகத் தொழிற்படல்
3. நிதிக் கொள்கைகளை வகுத்தமைத்தல்

4. அரசாங்கத்தின் வங்கியாளராகத் தொழிற்படல்
5. நாணயப் பரிமாற்ற வீதங்களைக் கட்டுப்படுத்தல்
6. பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளல்

**(ஏதாவது மூன்று சரியான விடைகளுக்கு 03 புள்ளிகள்)**

**(c)**

**1. கடன் அட்டைகள்**

அதிகாரமளிக்கப்பட்ட விற்பனைப் பிரதிநிதிகளிடமிருந்து குறிப்பிட்ட பெறுமதியினுள் பொருட்கள் அல்லது சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நபர் ஒருவரை அனுமதிக்கின்றவாறு வர்த்தக வங்கி ஒன்றினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் விநியோகிக்கப்படுகின்ற அட்டைகள் கடன் அட்டைகள் என அழைக்கப்படுகின்றன. இங்கு கடன் எல்லை ஒன்று காணப்படுவதுடன் அந்த எல்லை வரை வாடிக்கையாளர் பொருட்கள் அல்லது சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**2. பற்று அட்டைகள்**

கணக்கு வைத்திருப்பவர் தனது கணக்கிலிருந்து பணத்தினை எடுப்பதற்கும் அதேபோன்று பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கும் இவ்வட்டையினைப் பயன்படுத்த முடியும். இது வர்த்தக வங்கிகளால் விநியோகிக்கப் படுகின்றன.

**3. திறன் அட்டைகள் (Smart cards)**

இது ஒரு ஒன்றிணைந்த சுற்று அட்டை ஆகும். குறித்தொரு பணப் பெறுமதி யுடன்கூடிய ஒரு சிப் (chip) இவ்வட்டையில் பதிக்கப்பட்டிருக்கும். இதனைப் பயன்படுத்திப் பரிமாற்றமொன்று நிகழ்ந்ததும் பரிமாற்றப் பெறுமதி அட்டைக்குப் பற்று வைக்கப்படுவதுடன் மீதி குறைவடைகிறது.

**4. பிட் கொயின் (Bit coin)**

பரிமாற்றமானது வலையமைப்பு முடிச்சுகளால் சரிபார்க்கப்பட்டு கட்டகச் சங்கிலி (Block chain) என அழைக்கப்படுகின்ற பொது விநியோகப் பேரேடொன்றில் பதியப்படுகின்றன. பயனர் இடையீட்டாளர் ஒருவரின் தேவையின்றி நேரடியாக பரிமாற்றம் செய்ய முடியும்.

**(ஏதாவது மூன்று சரியான விடைகளுக்கு 03 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**வினா 05**

| |
|---|
| **அலகு 3 – வியாபாரத்திற்கான துணைச் சேவைகள்**<br><br>கற்றற் பேறுகள் – வியாபாரமொன்றின் வெற்றிக்கு துணைச் சேவைகளை முகாமிப்பதன் முக்கியத்துவத்தை விவரித்தல்<br><br>- துணைச் சேவையின் பண்பியல்புகளை விவரித்தல் |

**(a)**

**1. கவனம் மற்றும் பாதுகாப்பை வழங்குதல்**

காப்புறுதியானது நிதிசார் உதவிகளை வழங்குவதுடன் வியாபாரம் மற்றும் மனித வாழ்க்கையின் நிச்சயமற்றதன்மையைக் குறைக்கிறது. இது குறிப்பிட்ட நிகழ்வுகளுக்கு எதிராக கவனத்தையும் பாதுகாப்பையும் வழங்குகிறது. திடீர் இழப்பு குறித்த பயம் எப்பொழுதும் இருக்கிறது. காப்புறுதியானது எந்தவொரு இழப்பிற்கும் எதிரான ஒரு பாதுகாப்பினை (cover) வழங்குகிறது.

**2. காப்புறுதியுடன் வியாபார வினைத்திறன் அதிகரிக்கிறது**

வியாபாரத்தின் உரிமையாளர் நட்டங்களின் நச்சரிப்பிலிருந்து விடுபடும்போது, அவர் நிச்சயமாக வியாபாரத்திற்கென அதிக நேரத்தை அர்ப்பணிப்பார். கவலையற்ற உரிமையாளர் இலாபத்தை உச்சப்படுத்துவதற்காகச் சிறப்பாகப் பணியாற்ற முடியும். ஒரு நபரின் மரணத்தில், ஆதனம் அல்லது பொருட்களின் சேதம், அழிவு அல்லது காணாமற் போதலில் காப்புறுதிக் கொள்கைகளுடன் ஒரு குறிப்பிட்ட தொகையை செலுத்துவதற்கு வியாபாரிகளுக்கு உத்தவவாதம் அளிக்கப்படுகிறது. நட்டத்தின் நிச்சயமற்றதன்மை வணிகர் ஒருவரின் மனதை மோசமான முறையில் பாதிப்படையச் செய்யலாம். **காப்புறுதியானது** நிச்சயமற்ற தன்மையைக் களைந்து, கடினமாக உழைக்க வணிகர்களை ஊக்கப்படுத்துகிறது.

**3. இடர் பரவல்**

காப்பீடு பெறுபவரிடமிருந்து காப்பீடு அளிப்பவருக்கு இடர் பரவுவதற்கு காப்புறுதி வழிசெய்கிறது. காப்புறுதியின் அடிப்படைக் கோட்பாடு, ஏராளமான மக்களிடையே இடரைப் பரப்புவதாகும். நட்டமொன்று ஏற்படும் போதெல்லாம், அது காப்புறுதி அளிப்பவரின் நிதியிலிருந்து ஈடுசெய்யப்படுகிறது.

**4. கடன் மேம்பாடு**

கடனுக்கான பிணையமாக காப்புறுதியை அடகுவைப்பதன் மூலம் வணிகர் ஒருவர் கடன் ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியும். காப்புறுதி பெற்ற நபர்கள் அவர்களது இறப்பில் நிச்சயமாக கொடுப்பனவு செய்யப்படும் என்ற காரணத்தால் அதிகளவு கடன்களைப் பெறுகிறார்கள். அத்தகைய காப்புறுதியை அடகு வைப்பதன் மூலம் வட்டியுடன் பெறக்கூடிய கடன் தொகை காப்புறுதியின் காசுப் பெறுமதியினை விஞ்சாதிருக்கும். மரணம் நிகழுமிடத்து, இந்தப் பெறுமதி கடனை வட்டியுடன் சேர்த்து அடைப்பதற்காகப் பயன்படுத்தப்பட முடியும். கடன் பெறுபவர் வட்டியை மீளச் செலுத்துவதில் நாட்டமில்லாதிருப்பின், கடன் கொடுத்தவர் காப்புறுதியினை ஒப்படைத்து அவருக்குச் செலுத்தப்பட வேண்டிய கடனையும் வட்டியையும் பெற்றுக் கொள்ளலாம்.

**5. வியாபாரத் தொடர்ச்சி**

எந்தவொரு வியாபாரத்திலும் குறிப்பாக பங்குடமை வியாபாரத்தில் பங்காளர் ஒருவரின் இறப்பினால் அவ்வியாபாரம் நிறுத்தப்படலாம் என்றபோதிலும் எஞ்சியிருக்கும் பங்காளர்கள் வியாபாரத்தை மீள ஆரம்பிக்க முடியும். இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் வியாபாரம் மற்றும் இறந்த பங்காளர்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்படுவர். காப்புறுதியானது இறப்பின்போது போதுமானளவு நிதியினை வழங்குகிறது. ஒவ்வொரு பங்காளரும் பங்குடமையில் அவரவர் நாட்டத்தின்படியான தொகைக்கு காப்புறுதி பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பங்காளரின் இறப்பின்போது அந்தத் தொகையினை அவரில் தங்கியிருப்பவர்கள் பெற்றுக் கொள்ளலாம். ஆதனக் காப்புறுதியின் உதவியுடன், அனர்த்தங்கள் மற்றும் மிகப்பெரிய விரயம் அல்லது நட்டம் காரணமாக வியாபார வெளிப்பாடுகளின் மாற்றம் ஆகியவற்றுக்கு எதிராக வியாபாரத்தின் ஆதனத்திற்கு பாதுகாப்பளிக்கப்படுகிறது.

**6. ஊழியர் சேமநலன்**

**ஊழியரின் சேமநலத்திற்கு தொழில்தருநர் பொறுப்புடையவராக இருக்கிறார்.** எனவே, முன்கூட்டிய மரணம், வலுவிழப்பிற்கான ஏற்பாடு மற்றும் வயது முதிர்ந்தவர்களுக்கான ஏற்பாடு ஆகியவற்றை வழங்கக்கூடியதாக இருக்கின்ற பிந்தையவர்களால் முந்தையவர்களின் நலனைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. இந்தத் தேவைப்பாடுகள் ஆயுள் காப்புறுதி, விபத்து மற்றும் சுகவீன நன்மை, பொதுவாகக் குழுக் காப்புறுதியால் வழங்கப்படும் ஓய்வூதியங்கள் போன்றவற்றின் மூலம் இலகுவாகப் பூர்த்தி செய்யப்பட முடியும். குழுக் காப்புறுதிக்கான தவணைக் கட்டணம் பொதுவாக தொழில்தருநரால் செலுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் ஊழியர்களின் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கான காப்புறுதியின் மலிவானதொரு வடிவமாக இருக்கிறது. ஊழியர்களுக்கு மேலுள்ள நன்மைகளை உத்தரவாதப்படுத்தும்போது அவர்களுடைய பணிகளைப் பூர்த்திசெய்வதற்கு அவர்கள் தங்களுடைய உயர்ந்தபட்ச இயலுமைகளைப் பிரயோகிப்பார்கள். இத்தகைய திட்டங்களின் உதவியுடன் ஊழியர்கள் மற்றும் தொழில்தருநருக்கிடையிலான போராட்டத்தையும் சச்சரவுகளையும் எளிதாகக் குறைத்துக்கொள்ள முடியும்.

**(ஏதாவது நான்கு சரியான விடைகளுக்கு 06 புள்ளிகள்)**

**(b)**

1. ஆயுள் காப்புறுதி
2. தீ அபாயக் காப்புறுதி
3. கடல்சார் காப்புறுதி
4. மோட்டார் வாகனக் காப்புறுதி
5. இடைவழியிலுள்ள பணக் காப்புறுதி

**(ஏதாவது நான்கு சரியான விடைகளுக்கு 02 புள்ளிகள்)**

**(c)**

1. காப்புறுத்தத்தக்க நாட்டம்
2. மீயுயர் நன்மதிப்பு
3. நட்ட உத்தரவாதம்
4. கடன் பற்றுரிமை மாற்றீடு (Subrogation)
5. பங்களிப்பு
6. அண்மைக் காரணம் (Proximate Cause)

**(ஏதாவது நான்கு சரியான விடைகளுக்கு 02 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## பகுதி C

ஒரு கட்டாய வினா

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

| |
|---|
| **அலகு 1 – வியாபார எண்ணக்கருவும் பல்வேறு வகையான நிறுவனங்களும்** |
| **அலகு 2 – வியாபாரச் சூழலும் வியாபார நிறுவனம் மீதான அதன் தாக்கமும்** |
| **அலகு 6 – பொருளாதாரமொன்றின் முதுகெலும்பாக SMEs** |
| **அலகு 7 – தொழில் முயற்சிகளின் பங்களிப்பு** |
| கற்றற் பேறுகள் – பல்வேறு வகையான நிறுவனங்களையும் மதிப்பிடுதல் |
| - வியாபாரச் சூழலையும் நிறுவனம் மீதான அதன் தாக்கத்தையும் பகுப்பாய்வு செய்தல் |
| - பொருளாதாரமொன்றில் SMEs இன் முக்கியத்துவத்தை மதிப்பிடுதல் |
| - அபிவிருத்திக்கு தொழில் முயற்சிகளின் முக்கியத்துவத்தை விவரித்தல் |

**(a)**

<u>அனுகூலங்கள்</u>

1. தாபிப்பது இலகுவானது
2. உங்களுக்காக வேலை செய்தல்
3. வரி அனுகூலங்கள்
4. அந்தரங்கத்தன்மை **(02 புள்ளிகள்)**

<u>பிரதிகூலங்கள்</u>

1. வரையறையற்ற பொறுப்பு
2. இடர் தனிப்பட்ட சொத்துக்கள்
3. வியாபாரஞ் சார்ந்த நிலை
4. வரையறுக்கப்பட்ட மூலதனக் கிடைப்பனவு **(02 புள்ளிகள்)**

**(b) பலம்** – AAT பரிசு வெற்றியாளர்

– அவர் AAT தகைமையையும் பட்டத்தையும் கொண்டிருத்தல் **(1 ½ புள்ளிகள்)**

**பலவீனம்** – மூலதனப் பற்றாக்குறை

– வியாபாரம் தனியுடைமையாக இருத்தல் **(1 ½ புள்ளிகள்)**

**வாய்ப்பு** – பெற்றோர் மத்தியில் நிகழ்ச்சித்திட்டம் பற்றிய விழிப்புணர்வு அதிகரித்தல்

- அவர் சிறந்த SME விருதை வென்றிருத்தல் **(1 ½ புள்ளிகள்)**

**அச்சுறுத்தல்** – போட்டி அதிகரித்தல்

- SME துறையில் எதிர்நோக்கப்படுகின்ற சவால்கள் **(1 ½ புள்ளிகள்)**

**(c)**

1. வர்த்தக வங்கிகள் கடன் கொடுப்பதற்குத் தயங்குகின்ற போக்கு காணப்படல்
2. தொழில்நுட்பத் திறன்களின் பற்றாக்குறை
3. வெளியீடுகளின் தரத்தைப் பேணுதல்
4. உட்கட்டமைப்புகளின் பற்றாக்குறை
5. பெரியளவு வியாபாரங்களினால் ஏற்படும் போட்டி
6. வியாபார ஒழுங்குவிதிகள் தொடர்பான சிக்கல்கள்

**(ஏதாவது நான்கு பொருத்தமான பிரச்சினைகளுக்கு 04 புள்ளிகள்)**

**(d)**

1. இடர் ஏற்பாளர்கள்
2. புத்தாக்குநர்கள்
3. சுய ஊக்கம்
4. எதிர்கால நோக்கு
5. சந்தையிலுள்ள வாய்ப்புகளை / இடைவெளிகளை உணர்வதற்கான ஆற்றல்
6. நெகிழ்ச்சித்தன்மை
7. தளராத நம்பிக்கை

**(ஏதாவது நான்கு பொருத்தமான பண்பியல்புகளுக்கு 04 புள்ளிகள்)**

**(e)**

1. சமனிலையான பிராந்திய அபிவிருத்தி
2. தமது சமூகத்தின் அபிவிருத்திக்கு உதவுதல்
3. தொழில் உருவாக்கம்
4. மிகுதியான வளங்களின் பாவனை
5. புதிய தொழில்நுட்பவியலின் அறிமுகம்
6. வாழ்க்கைத்தர மேம்பாடு
7. GDP மற்றும் தனிநபர் வருமானம் அதிகரித்தல்

**(ஏதாவது நான்கு பொருத்தமான பங்களிப்புக்கு 02 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**